அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :87/2017

தேதி :08/09/2017

## தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு வேண்டுகோள்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் திரு ஆர் சரத்குமார் பத்திரிக்கை செய்தி.

### மக்கள் நலனை முன்னிறுத்துவோம்.

கடந்த டிசம்பர் மாதம் முதல் தமிழக மக்களின், தமிழனின் தமிழகத்தின் ஒவ்வொரு உரிமையும் முன்னேற்றமும் வளர்ச்சி பாதையில் செல்லவில்லை. எங்கு பார்த்தாலும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள்.

ஒரு மாபெரும் தலைவரை தமிழகம் இழந்திருக்கிறது. தமிழகத்தை வழி நடத்தி சென்ற சக்தி வீழ்ந்திருக்கிறது என்பது உண்மை.

இச்சூழலில், அரசியல் அதிகாரங்களை எல்லாம் தற்காலிகமாக ஒதுக்கி வைத்துவிட்டு, அரசாங்கத்தோடு சேர்ந்து ஒத்துழைத்து, ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்க உதவியாக இருப்போம் என்று எண்ணும் அரசியல் நெறிகள் எதிர்க்கட்சிகளுக்கு இல்லை. மக்கள் நலனே முக்கியம், அவர்களுக்கு உரியவைகளை, உரிமைகளை நாம் பெற்று தந்தால் பதவிகள் எல்லாம் உகந்த நேரத்தில் மக்களே அழைத்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையை ஆட்சியாளர்கள் வளர்த்துக்கொள்ளவேண்டும். தமிழகத்தை பாதிக்கும் மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு எந்த வித தயக்கமும் பயமும் இன்றி தமிழக மக்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று, பெற வேண்டிய உரிமையை பெறுவதற்கு முழக்கமிட்டால், தமிழகத்தின் ஒட்டு மொத்த மக்கள் தொகையும் உங்கள் பக்கம் இருக்கும் என்று நான் ஏற்கனவே பதிவு செய்திருக்கின்றேன்.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in
Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624






நான் ஆதரித்த அரசு, அதிமுக என்ற கட்சி ஆட்சி பீடத்தில் அமர நானும் உழைத்திருக்கிறேன் என்ற உரிமையிலும், எனது ஆதர்ஷ நாயகன் புரட்சி தலைவர் ஆரம்பித்த கட்சி, புரட்சி தலைவி வளர்த்து கட்டி காத்த கட்சி என்பதன் அடிப்படையிலும் இந்த ஆட்சி நீடித்து, மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் எனவும், பல முறை கூறியிருக்கிறேன். தற்போது இந்த ஆட்சி எதிர்கொள்ளும் நிலை கண்டு வேதனை அடைகிறேன்.

உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியதுபோல உள்ளாட்சி தேர்தல் நடத்திட முடியாமல் தொய்வு நிலை, விடைகாணாத நெடுவாசல், கதிராமங்கலம் பிரச்சனைகள், விடை காண இயலாமல் நீடிக்கும் நீட் போன்ற விவகாரங்கள், அனைத்தையும் பார்க்கும் போது, என்னுடைய 21 வருட அரசியல் அனுபவத்தில், இதுவரை மக்கள் சந்தித்திராத பல நிகழ்வுகளை தமிழகம் எதிர்கொள்வதை பார்த்து வேதனை அடைகிறேன்.

அணியென்பது, தேர்தலுக்கு முன்னர் தீர்மானிக்க பட வேண்டியது, தேர்ந்தெடுக்க பட்ட அரசாங்கம் அணி பிரிந்து செயல்படுவது, ஜனநாயக முறையல்ல. இதை பயன்படுத்தும் மற்ற கட்சிகளின் அணுகு முறையும் மக்களுக்கு எதிரானது. மக்கள் அனைவரும் ஒரே குரலுடன் அரசாங்கத்தை திறமையாக நடத்தி செல்லுங்கள், உங்கள் பிரிவுகளை பிறகு வைத்துக்கொள்ளுங்கள் என்று வலியுறுத்த வேண்டிய கட்டாயம் வந்து விட்டது என்பது தவிர்க்க முடியாத உண்மை.

தொழில் துறையிலும் , கல்வி துறையிலும் என அனைத்திலும் முன்னிலை வகித்த மாநிலம், தற்போது மற்றவர்கள் கேலியும் கிண்டலும் செய்வதை காணும் போது வேதனை அடைகிறேன்.

"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அந்நியர் வந்து புகலென்ன நீதி?" என்றுரைத்த பாரதியார் நினைவுநாளை கொண்டாட இருக்கும் இம்மாதம் தமிழகத்தின் முன்னேற்றத்தையும் அமைதியையும் எந்த ஆதிக்க சக்தியும் குலைத்து விடாமல் பாதுகாப்பது நம் அனைவரின் கடமை என்றுணர்ந்து மாநிலத்தை கட்டுக்கோப்புடன் நடத்திச்செல்லவேண்டும்.


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சுய வெற்றி தோல்வியை பற்றி சிந்திக்காமல், மக்களின் வெற்றியை, தமிழகத்தின் வெற்றியை மனதில் கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைதி பூங்காவாக இருந்த தமிழகம் போராட்டக்களமாக உருமாறி, தமிழக மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கிவிடாமல், தமிழனின் அனைத்து பிரச்சனைகளுக்கும் உடனடியாக விடை காண முயலுங்கள் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவன தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com